1993 ஏப்ரல் 23] [திரு. ஆர். டி. அரங்கநாதன்]

மேலும் ஒரு கோரிக்கையாக, பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் அரசு மானியமாகக் கொடுக்கும் தொகையை உயர்த்தி கொடுத்து, அவர்கள் 1-/12 சென்ட் நிலம் வைத்திருந்தால், அவர்களுக்கும் வீடு கட்ட மானியமாக ரூ. 15 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று— வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் கடன் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று— இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5–20

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் விடுதலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க் கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். "Thiru P. V. Rajendran, M.L.A. who was arrested 15 day was released at 14-30 Hrs. on his own bail by the Police.'' காவல் துறையினரால் அவருடைய சொந்த ஜாமீனில் விடுதலை செய்து இருப்பதாகத் தகவல் அறிந்து சொல்கிறார்கள். திருமதி ரெ. சியாமளா.

5. மானியக் கோரிக்கைகள், 1993—94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு''

என்ற உலகப் பொது மறையாம் திருக்குறளில் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலக்கணங்களையும் ஒருங்கே பெற்று நமது இதய தெய்வம், கழகத்தின் காவல்